# கல்முனைக் கடற்றொழில் பிரதேசத்தின் கடல் மீன் பிடியளவும் எதிர்நோக்கும் சவால்களும்: ஒரு விவரணயாய்வு

[1]எஸ்.றபீக்கா அமீர்தீன, நுபைல். [2]ஏ. ஏ.எம்
[1,2] இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

**ஆய்வுச் சுருக்கம்**
கல்முனை கடற்றொழில் மாவட்டமானது 12 பிரதேச செயலகப் பிரிவுகளையும் 219 கிராம சேவகர் பிரிவுகளையும் கொண்டுள்ளது. 57 மீன்பிடி கிராமங்களும் 65 மீன்பிடி மையங்களும் 121 மீன்பிடி தளங்களும் இப்பிரதேசத்தில் காணப்படுகின்றன. மீன் பிடிப்போரில் செயற்படு மீனவர்கள் 19,039 பேர் உள்ளனர். மொத்த மீனவ சனத்தொகை 25,025 பேராகும். இங்கு மொத்தமாக 17,156 மீனவ குடும்பங்கள் காணப்படுகின்றனர் (District Fisheries Office, Kalmunail – 2008).இவ்வாய்விற்கான தரவுகளும் தகவல்களும் முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவு மூலங்களிலிருந்து பெறப்பட்டுள்ளன. தரவுகள் பண்புசார் மற்றும் அளவுசார் முறைகளினூடாகப் பெறப்பட்டுள்ளன. சேகரிக்கப்பட்ட தரவுகள் புள்ளிவிபரவியல் பகுப்பாய்வு முறையினைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆய்வு முடிவுகள் தொகுத்தறி முறையினைப் பிரதானமாகவும் உய்த்தறி முறையினைத் துணையாகவும் கொண்டு பெறப்பட்டுள்ளன.மீன்பிடித்துறையில் ஒரு சிறந்த முகாமைத்துவமின்மையால் அங்கு வாழும் மீனவர்களால் போதியளவு வருமானத்தை ஈட்டிக்கொள்ள முடிவதில்லை. இம்மாவட்ட மீன்பிடித்துறையில் நவீன மீன்பிடி உபகரணங்களோ வேறு நவீன தொழில்நுட்பமோ குறைந்தளவில் பயன்படுத்தப்படுகின்றமையால் இப்பிரதேச மீன்வளம் சுரண்டலுக்கு உட்படுகின்றது. ஆய்வுப் பிரதேசத்தில் வாழும் பெரும்பான்மையான மக்கள் கரையோர மீன்பிடியையே தங்களது வாழ்வாதாரமாகக் கொண்டிருப்பினும் அதனை விருத்தி செய்வதற்கான தொழில்நுட்பவியல் மாற்றங்களை அறிந்திருப்பது மிகக் குறைந்தளவிலேயே காணப்படுகின்றது. அதன் காரணமாக இப்பிரதேச மீன்பிடியில் ஈடுபடும் குடும்பங்கள் வறுமைக்குட்பட்டவர்களாகக் காணப்படுவதால் அவர்களுடைய பொருளாதார வளர்ச்சி குன்றிக் காணப்படுகின்றது.எனவே, இப்பிரதேச மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களுக்குச் சிறந்த தொழில்நுட்பப் பயிற்சியை வழங்குவதனூடாகவும் நவீன மீன்பிடி முறைகளினை விருத்தி செய்வதனூடாகவும் அரச உதவிகளை வழங்குவதனூடாகவும் மானிய அடிப்படையிலான மீனவ கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதனூடாகவும் பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்தி அவர்களது வாழ்வாதாரத்தை முன்னேற்ற முடியும் என இவ்வாய்வு பரிந்துரைக்கின்றது.

**பிரதான சொற்கள்:** கடல் மீன்பிடிக் கைத்தொழில், வாழ்வாதாரம், தொழில்நுட்பம்.

## அறிமுகம்

கல்முனை கடற்றொழில் மாவட்டமானது நாடளாவிய ரீதியில் காணப்படுகின்ற 15 கடற்றொழில் மாவட்டங்களுள் ஒன்றாகக் காணப்படுகின்றது. இப்பிரதேசத்தின் வாழ்வாதார நடவடிக்கைகளாக விவசாயம், மீன்பிடி, வர்த்தகம் மற்றும் ஏனைய தொழில் நடவடிக்கைகள் காணப்படுகின்றன. இங்கு மீன்பிடியானது விவசாயத்துக்கு அடுத்த நிலையில் காணப்படுகின்றது. இம்மாவட்டமானது கல்முனை (தமிழ்), கல்முனை (முஸ்லிம்), சாய்ந்தமருது, காரைதீவு, நிந்தவூர், அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, திருக்கோயில், பொத்துவில், உல்லை, பாணம ஆகிய 12 மீன்பிடி பிரதேச செயலகப் பிரிவுகளை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது.

கல்முனை கடற்றொழில் மாவட்டமானது அண்ணளவாக 84 மைல் நீளமான கடற்கரைப் பிரதேசத்தைக் கொண்டுள்ளது. மேலும்,கரையிலிருந்து 200 கடல் மைல் தொலைவு வரையான மீன்பிடிப் பிரதேசத்தினையும் இது கொண்டுள்ளது. இக்கரையோரப் பிரதேச சனத்தொகையின் கணிசமான தொகையினர் மீன்பிடிக் கைத்தொழில்கள் நடவடிக்கைகளில் ஈடுபடுவோராகக் காணப்படுகின்றனர். கல்முனை கடற்றொழில் மாவட்டத்தில் மொத்தமாக 19,039 செயற்படு மீனவர்கள் தொழில் நடவடிக்கைகளில் நேரடியாக ஈடுபடுவோராகக் காணப்படுகின்றனர். மேலும், கணிசமான அளவினர் மீன் வியாபாரம் மற்றும் ஏனைய தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவோராகக் காணப்படுகின்றனர். இத்தகைய நிலையில் காணப்படும் கடல் மீன்பிடிக்கு ஏதுவான சாதகங்கள் இங்கு காணப்பட்ட போதிலும் கல்முனைக் கடல் மீன்பிடி உற்பத்தியானது இலங்கையின் ஏனைய பகுதிகளை விட பிற்போக்கான நிலையிலேயே காணப்படுகின்றது. இதற்குக் காரணமான ஏதுக்களை இனங்கண்டு அவற்றை வெற்றி கொள்வதன் மூலமே இப்பிரதேச கடல் மீன்பிடித் துறையை அபிவிருத்தி செய்ய முடியும். இது பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக உள்ளது.

**ஆய்வின் முக்கியத்துவம்**

கல்முனைக் கடற்றொழில் மாவட்டமானது நாடளாவிய மீன்பிடி உற்பத்தி நடவடிக்கையில் குறிப்பிடத்தக்க அளவு பங்களிப்பினை ஆற்றி வருகின்ற ஒரு பிரதேசமாகக் காணப்படுகின்றது. கடந்த காலங்களை எடுத்து நோக்குவோமானால் மீன்பிடி உற்பத்தியின் அளவானது அதிகரித்துச் செல்வதனை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. ஒரு சில காலங்களில் பல்வேறுபட்ட காரணங்களின் அடிப்படையில் அவை தளம்பலுள்ள நிலையில் காணப்படுவதையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. கல்முனைக் கடற்றொழில் மாவட்டத்தின் வருடாந்த மீன் உற்பத்திப் போக்கினை அட்டவணை இல: 01, மற்றும் வரைபடம் இல: 01 என்பன காட்டுகின்றன. அந்தவகையில், ஆய்வுப் பிரததேசத்தில் காலம் காலமாக நிலவிவரும் கடற்றொழில் மற்றும் மீனவ சமூகத்தின் வாழ்வாதாரப்பிரச்சினைகளை இணங்காண்பதுடன் அவற்றுக்கான தீர்வுகளை முன்வைபதும் முக்கியத்துவமிக்கதாகும்.

**ஆய்வுப் பிரச்சினை**

கல்முனைக் கடற்றொழில் மாவட்டமானது நாடளாவிய மீன்பிடி உற்பத்தி நடவடிக்கையில் குறிப்பிடத்தக்க அளவு பங்களிப்பினை ஆற்றி வருகின்றமையினால் கடந்த காலங்களில் மீன்பிடி உற்பத்தியின் அளவானது அதிகரித்துச் சென்றாலும் கூட ஒரு சில காலங்களில் பல்வேறுபட்ட காரணங்களின் அடிப்படையில் அவை தளம்பலுள்ள நிலையில் காணப்படுவதையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. ஆகவே, ஆய்வுப் பிரததேசத்தில் காலம் காலமாக நிலவிவரும் கடற்றொழில் மற்றும் மீனவ சமூகத்தின் வாழ்வாதாரப் பிரச்சினைகள் மீன்பிடி அளவு மட்டத்துடனும் அவற்றின் சந்தைப்படுத்தலிலும் முற்றிலும் தங்கியிருப்பதால் அவற்றோடுள்ள பிரச்சினைகளை எவ்வாறு இனங்காண்பது என்பதும் அவற்றுக்கான தீர்வுகளை வழி மொழிவதுமே முக்கிய ஆய்வுப் பிரச்சினையாக அமைகிறது.

**ஆய்வின் நோக்கம்**

கடந்த காலங்களில் ஆய்வுப் பிரதேசத்தில் மீன்பிடி உற்பத்தியின் அளவானது தளம்பல் நிலையில் காணப்படுவதனால் இப்பிரதேச கடற்றொழில் மற்றும் மீனவ சமூகத்தின் வாழ்வாதாரப் பிரச்சினைகளை இனங்காண்பது பிரதான ஆய்வு நோக்கமாகவும், மீன்பிடி அளவு மட்டத்துடனும் அவற்றின் சந்தைப்படுத்தலிலும் காணப்படக் கூடிய இன்னோரன்ன பிரச்சினைகள் மற்றும் சவால்களையும் கண்டறிவதுடன் அவற்றுக்கான தீர்வுகளை முன்வைப்பதும் துணை நோக்கங்களாகவும் அமைகின்றன.

**ஆய்வுக் கருதுகோள்**

1: ஆய்வுப் பிரதேசத்தில் மீன்பிடி அளவு மட்டங்களில் பாரிய ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன.

2:ஆய்வுப் பிரதேசத்தில் மீன்பிடி அளவு மட்டங்களில் பாரிய ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றனமையால் மீனவ சமூகம் வாழ்வாதாரப் பிரச்சினைகளை எதிர் கொள்கின்றன.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வினை மேற்கொள்வதற்கு முதல் நிலைத் தரவுகளும் இரண்டாம் நிலைத்தரவுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன.ஆனாலும், ஒப்பீட்டுரீதியில் முதல் நிலை தரவுகளைவிடவும் இரண்டாம் நிலைத் தரவுகளே இவ்வாய்வுக்கு அதிகளவில் பயன்படுத்தப்பட்டுள்ளன. தரவுகள் பண்புசார்மற்றும் அளவுசார் முறைகளினூடாகப் பெறப்பட்டுள்ளன. சேகரிக்கப்பட்ட தரவுகள் புள்ளிவிபரவியல் பகுப்பாய்வு முறையின் வழியமைந்த தொகுத்தறி முறையினைப் பிரதானமாகவும் உய்த்தறி முறையினைத் துணையாகவும் கொண்டு பெறப்பட்டுள்ளன.

**இலக்கிய மீளாய்வு**

பிருந்தா, பமிலா டியூரா (2004) ஆகியோரால் எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரையில் இலங்கை வடமாகாணத்தின் கடல் வலயப் பின்னணியானது பௌதீக, சமூகப் பொருளாதார அடிப்படையில் நோக்கப்பட்டுள்ளது. வடமாகணத்தின் பொருளாதார நடவடிக்கையில் மீன்பிடிக் கைத்தொழில் ஆற்றி வரும் பங்களிப்பு அதன் வளர்ச்சிப் போக்கும் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும், தொழில்நுட்ப, நிபுணத்துவ, மூலதனப் பற்றாக்குறை, சீரான வானிநிலை எதிர்வு கூறலின்மை, இந்திய மீனவர்களின் ஊடுருவல் பற்றியும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. அத்துடன், பதனிடலும் போக்குவரத்து மற்றும் சந்தைப்படுத்தல் பிரச்சினைகளும் இனங்காணப்பட்டுள்ளன. இவர்களது ஆய்வின் சிபார்சு முன்மொழிவாக உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளின் விரிவாக்கம் மேலும் மூலதனவாக்கம் பற்றிய கரிசனை ஆகியன முன்வைக்கப்பட்டுள்ளன.

ஐயூப். எஸ் (2005) அவர்களினால் மேற்கொள்ளப்பட் ஆய்வில் அம்பாரை மாவட்ட மீன்பிடிக் கைத்தொழிலின் போக்கு, மீன்பிடி முறைகள், மீனவ சமூக அமைப்பு போன்ற அம்சங்கள் குறித்து நோக்கப்பட்டுள்ளன. இவ்வாய்வில் மீனவ சமூகத்தின் வறுமை பற்றி கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. சுரண்டல் மற்றும் தங்கிருப்பின் நியமங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. எனவே,விழிப்புணர்வு

நிகழ்ச்சித் திட்ங்கள், நிரந்தரக் கூலிக் கொள்கை, உட்கட்டமைப்பு விருத்தி, நவீன இயந்திரங்களின் அறிமுகம், களஞ்சியசாலை மற்றும் சந்தை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் என்பவற்றினூடாக மீனவ சமூகத்தினரின் வறுமை தணிப்பு முயற்சிகள் முன்னெடுக்கப்பட முடியும் எனக் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

Alan Post (2010) அவர்களின் ஆய்வில் மீன்பிடிக் கைத்தொழிலின் பிரச்சினைகளும் அதற்கான நிறுவன ஏற்பாடுகளும் பற்றி கலந்துறையாடப்பட்டுள்ளது. மேலும், வர்த்தக ரீதியாக மீன்பிடிக் கைத்தொழிலை மேற்கொள்வதில் காணப்படக் கூடிய தடைகளாக, மீன் வளங்களை விஞ்ஞான முறையில் இனங்காண்பது, நிலையான மீன் நிரம்பலை நிச்சயிப்பது, நஷ்டஈட்டு முறைகள், மீன் உற்பத்தி, கட்டுப்பாடற்ற மீன்பிடி முறைமைகள் மற்றும் பயனாளிக் குழுக்களிடையேயான முரண்பாடுகள் ஆகியன குறித்துக் காட்டப்பட்டுள்ளன. ஆய்வுச் சிபார்சுகளாக தனியார் துறையூடாக சந்தைப்படுத்தல் வசதிகளை விருத்தி செய்தல், மீன் உற்பத்திப் பொருட்களின் தரத்தை உயர்த்துதல், மீன்வளங்கள் தொடர்பான முகாமைத்துவ தீர்மானங்களை மற்றும் கொள்கைகளை ஏற்படுத்துதல் என்பன முன்வைக்கப்பட்டுள்ளன.

**ஆய்வுப் பெறுபேறுகளும் கலந்துரையாடலும்**

கீழ் உள்ள அட்டவணை மற்றும் வரைபடத்தின்படி 2000–2005 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியினை நோக்குவோமானால் 1270 மெ. தொன் அளவான வீழ்ச்சி காணப்பட்ட போது, 2005-2008 வரையான காலப்பகுதியில் மீன்பிடி உற்பத்தி நடவடிக்கையில் அதிகரித்த போக்கு நிலவுவதனைக் காணக்கூடியதாக உள்ளது (வருடாந்த சராசரி அதிகரிப்பு 4703 மெ. தொ). ஆயினும்,பிற்பட்ட 2009 மற்றும் 2010 காலப்பகுதியில் இதில் வீழ்ச்சி நிலை பதியப்பட்டுள்ளது. அதாவது, வருடாந்த சராசரி வீழ்ச்சி 1492 மெ. தொன்கள் ஆகும். இதிலிருந்து ஆய்வுப் பிரதேச மீன்பிடி நிலை தளம்பல் நிலையில் காணப்படுகின்றமையை அறியக் கூடிதாகவுள்ளது. மேற்காட்டப்பட்ட 10 ஆண்டு காலப்பகுதியில் 2008 ஆம் ஆண்டிலேயே ஆகக் கூடுதலான மீன் பிடி இடம் பெற்றுள்ளது (22,050 மெ. தொ). 2000 முதல் 2010 வரையான ஓட்டு மொத்த காலத்தையும் எடுத்துப் பார்த்தால் மீன்பிடி அளவு மட்டம் 107 சதவீதமாக அதிகரித்துக் காணப்பட்டாலும், வருடாந்த சராசரி வளர்ச்சி வீதம் 11 ஆக மட்டுமே அமைந்துள்ளது.

**அட்டவணை இல: 01**

கல்முனை மீன்பிடிப் பிரதேச செயலகப் பிரிவு மீன்பிடி உற்பத்தி (2000 – 2013)


| கல்முனை மீன்பிடிப் பிரதேச செயலகப் பிரிவு | |
|---|---|
| ஆண்டு | மெ .தொ |
| 2000 | 9210 |
| 2005 | 7940 |
| 2007 | 12810 |
| 2008 | 22050 |
| 2009 | 16260 |
| 2010 | 19066 |
| 2011* | 19008 |
| 2012* | 20154 |
| 2013* | 21300 |

Source: District Fisheries Office, Kalmunai – 2013,*Projected MT = - 2285598 + 1146 Year

மேலுள்ள அட்டவணை இல: 01 இன் பிரகாரம் 2011 முதல் 2013 வரையான மூன்று வருடங்களுக்குமான மதிப்பிடப்பட்ட வருடாந்த சராசரி மீன் பிடியளவு மட்டம் 20,154 மெ.தொ. ஆகும்.அதாவது, வருடாந்த சராசரி வளர்ச்சி வீதம் 33 ஆகும். இது ஏறத்தாழ 3 மடங்கு அதிகரிப்பாகும். ஆயினும், 2011 ஆண்டில் 58 மெ. தொன்களால் மீன் பிடி அளவு மட்டம் குறைவடைந்துள்ளது. இந்நிலை ஆய்வுப் பிரதேசத்தில் மீன் பிடியளவு மட்டத்தில் பாரியளவில் ஏற்றதாழ்வு நிலை காணப்படுகிறது எனும் ஆய்வுக் கருதுகோளை ஏற்றுக் கொள்கிறது. மேலும், ஆய்வுக்காலம் முழுவதையும் (2000-2013) எடுத்து நோக்கினால், 16,422 மெ. தொன்கள் எனும் வருடாந்த சராசரி மீன் பிடியளவு மட்டத்தையும்,அதேவேளை வருடாந்த சராசரி வளர்ச்சி வீதம் 11 ஆக மட்டுமே காணப்படுகிறமையும் அறிந்து கொள்ள முடிகிறது. இந் நிலை கடந்த ஒரு தசாப்த காலத்திலும் மீனவர்களின் மீன்பிடி முறைமையிலும் அவர்களின் வாழ்வாதார அம்சங்களிலும் எவ்வித மாற்றங்களையும் எடுத்து வரவில்லை எனும் கருதுகோளையும் ஏற்றுக் கொள்கிறது.

**வரைபடம் இல: 01**

கல்முனை கடற்றொழில் மாவட்டத்தின் வருடாந்த மீன்பிடியளவு (2000–2013)




மூலம்: அட்டவணை இல: 01

**கல்முனைக் கடற்றொழில் பிரதேச மீனவர்கள் எதிர்நோக்கும் சவால்கள்**

கல்முனைக் கரையோர வாழ் மக்களின் பிரதான பொருளாதார நடவடிக்கைகளுள் ஒன்றாக மீன்பிடித் தொழில் காணப்படுகின்றது. இந்தவகையில் அவர்களது வாழ்வாதார நடவடிக்கைகளில் இம் மீன்பிடிக் கைத்தொழிற்துறை கொண்டுள்ள பங்கு அளப்பரியதாகும். இருப்பினும் ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிட்டு நோக்கும்போது இப்பிரதேச மீன்பிடிக் கைத்தொழிற்துறையின் வளர்ச்சியானது மந்த கதியில் காணப்படுவதனை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இத்தொழிற்துறையின் பின்தங்கிய நிலையானது இத்துறை சார்ந்த மக்களின் வாழ்வாதார நடவடிக்கைகளையும் பாதிப்படையச் செய்வதாகக் காணப்படுகின்றது. இப்பிரதேச மீன்பிடிக் கைத்தொழிற் துறையின் முன்னேற்றத்திற்குப் பல்வேறு காரணிகள் தடையாக அமைந்துள்ளன. களவாய்வு மூலம் இப்பிரதேசத்தின் கண்டு கொள்ளப்பட்ட தடைகளாகப் போதிய வருமானமின்மை, மூலதனப் பிரச்சினை, உட்கட்டுமான வசதிகளின் பற்றாக்குறை போன்ற பல்வேறு பிரச்சினைகளை இனங்காணக் கூடியதாக இருக்கின்றது. இத்தகைய பிரச்சினைகளின் தலையீடானது இப்பிரதேசத்தின் மீன்பிடிக் கைத்தொழிற் துறையின் பின்தங்கிய நிலைக்குக் காரணமாக அமைந்து காணப்படுகின்றது.

**போதிய வருமானமின்மை**

பெரியநீலாவணை தொடக்கம் சாய்ந்தமருது வரையிலான பகுதிகளில் வாழும் மக்களில் கணிசமானளவினர் மீன்பிடிக் கைத்தொழிலைப் பிரதான தொழிற் துறையாகக் கொண்டுள்ளனர். வெளிக்கள ஆய்வுகளின் மூலம் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் நோக்கும்போது இத்தொழிற்துறையில் ஈடுபடுவோரில் 55% க்கும் மேற்பட்டோர் மீனவத் தொழிலாளிகளாகவே காணப்படுகின்றனர். இவர்களது சராசரி மாதாந்த வருமானமானது ரூபா 5,000 தொடக்கம் ரூபா 15,000 இற்கு இடைப்பட்டதாகக் காணப்படுகின்றது. இது இவர்களது வாழ்க்கைச் செலவிற்கு ஈடுகொடுக்க முடியாத ஒரு தொகையாகும். இதனால் அவர்கள் பகுதிநேர வேலையாக விவசாயம், வியாபாரம், சிறுகைத்தொழில் நடவடிக்கைகள் போன்றவற்றை மேற்கொள்பவர்களாகவும் காணப்படுகின்றனர்.

**மூலதனப் பிரச்சினை**

இப்பிரதேசத்தின் மீன்பிடித் தொழில் நடவடிக்கைக்குத் தேவையான சாதனங்களைப் பெற்றுக் கொள்வதற்குப் போதிய மூலதனம் கிடைக்கப் பெறாமையானது இப்பிரதேச மக்கள் எதிர்கொள்ளும் பாரிய பிரச்சினையாகக் காணப்படுகின்றது. இப்பிரதேசத்தில் செய்யப்பட்ட வெளிக்கள ஆய்வுகளின்படி 3 வழிமுறைகள் மூலதனத்தைப் பெறும் வழி முறைகளாகக் கண்டு கொள்ளப்பட்டன. அவையாவன, தனியார் உழைப்பு, கூட்டு முயற்சி, மற்றும் கடன் என்பனவாகும். இங்கு கடன் மூலமாகவே அதிகளவான மூலதனம் திரட்டப்படுகின்றது. இதில் பெரும்பகுதி தனியாரிடமிருந்து பெறப்படுகின்றது. இந்தக் கடன் மற்றும் அதன் மீதான வட்டி என்பவற்றினூடாகப் பாரிய பிரச்சினைக்கு வழிவகுப்பதாகக் காணப்படுகின்றது. இவற்றைத் தவிர்க்குமிடத்து உரிய சாதனங்களுக்கான மூலதனத்தினைப் பெற்றுக் கொள்ளாத நிலையில் தொழில் நடவடிக்கை பாதிப்புறும் நிலைக்குத் தள்ளப்படுகின்றது.

**குறைந்தளவிலான நவீன உபகரணங்களின் பயன்பாடு**

இங்கு பின்பற்றப்படும் மீன்பிடி முறைகளுள் 75% ஆனது கரையோர மீன்பிடியாகவும் 25% ஆனது ஆழ்கடல் மீன்பிடி நடவடிக்கைகளாகவும் உள்ள நிலையில், ஆழ்கடல் மீன்பிடி நடவடிக்கைகள் குறைவாக இருப்பதற்குக் காரணம் நவீன தொழில்நுட்பங்களின் பயன்பாடு குறைவாகக் காணப்படுகின்றமையாகும். வெளிக்கள ஆய்வின்படி 65%மரபு வழி மீன்பிடி முறையாகவும் நவீன மீன்பிடி 10% ஆகவும் 25% இரு வழி முறைகளாகவும் அமைந்துள்ளமை தெரியவருகிறது. கரையோர மீன்பிடி பெரும்பாலும் மரபு வழிமுறையைப் பின்பற்றி, உதாரணமாக தோணிகளையே அதிகம் பயன்படுத்தி மீன் பிடிக்கப்படுகின்றது. இத்தகைய நிலையானது மீன்பிடிக் கைத்தொழில் மூலமான வெளியீடுகளைக் குறைவடையச் செய்வதனூடாக வினைத்திறனற்றதோர் செயற்பாட்டிற்கு வழிவகுக்கின்றது. இது இத்தொழிற்துறை

எதிர்கொள்ளும் பாரிய சவாலாகக் காணப்படுகின்றது.

**களஞ்சியப்படுத்தல் வசதிகளின் பற்றாக்குறை**

மீன்பிடி நடவடிக்கைகளின்போது உடனடி நுகர்விற்கான மீன்கள் தவிர ஏனையவற்றைக் களஞ்சியப்படுத்தி வைக்க வேண்டிய தேவை ஏற்படுகின்றது. ஆனால், இப்பிரதேசத்தினைப் பொறுத்தவரை அதற்கான வாய்ப்பு வசதிகள் குறைந்தளவிலே காணப்படுகின்றன. பெரும்பாலும் கருவாடாக்கல் செயற்பாடுகளையே இவர்கள் பெரும்பாலும் செய்கின்றனர். அதி நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய குளிரூட்டல் வசதிகள் இப்பிரதேசத்தில் இன்னும் ஏற்படுத்தப்படாத நிலையில் காணப்படுகின்றது. இதனால் ஆழ்கடல் மீன்பிடியில் இவர்கள் குறைவாகவே கவனம் செலுத்துகின்றனர். இத்தகைய பின்தங்கிய நிலை களஞ்சியப்படுத்தல் வசதிகளின் பற்றாக் குறையினாலேயே ஏற்படுகின்றது.

**சந்தைப்படுத்தல் பிரச்சினைகள்**

கடல் மீன் உற்பத்தியின் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவோராக மொத்த வியாபாரிகளும் சில்லறை வியாபாரிகளுமே காணப்படுகின்றனர். இப்பிரதேசத்தில் அதிகளவான மீன்பிடி இடம்பெறும் காலங்களில் கூட அவற்றை உள்நாட்டிற்கும் வெளிநாட்டிற்கும் ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்பு வசதிகள் மிகக் குறைந்தளவில் காணப்படுவதனால் ஏற்றுமதியாளர்களின் பங்களிப்புக் குறைவாகவே காணப்படுகின்றது. சில்லறை வியாபாரிகளின் பங்களிப்பே இங்கு அதிகமாகக் காணப்படுகின்றது. மேலும், இவர்களினூடாகச் சரியான விலையினைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது. சந்தைப்படுத்தல் வசதிகளின் பற்றாக்குறையே இதற்குக் காரணமாகக் கூறப்படுகின்றது. மேலும் குளிரூட்டல் வசதிகளுடன் கூடிய நவீன போக்குவரத்துச் சாதனங்களின் பற்றாக்குறையும் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளில் பாரிய இடர்பாட்டை எதிர்கொள்ளச் செய்வனவாகக் காணப்படுகின்றன. இது இப்பிரதேச மீன்பிடிக் கைத்தொழிலினைப் பின்தங்கிய நிலைக்கு இட்டுச் செல்லக் காரணமாக அமைகின்றது.

**மீன்பிடி உற்பத்திப் பற்றாக்குறை**

மீன்பிடி உற்பத்தியானது இப்பிரதேச மக்களின் உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பற்றாக்குறை நிலையினை எதிர்கொள்வதாகக் காணப்படுகின்றது. இது இப்பிரதேசத்தில் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதில் ஓரளவு பங்களிப்பினையே செலுத்துவது ஆய்வின்போது அறியக் கிடைக்கின்றது. ஆழ்கடல் வளம் உரிய முறையில் பயன்படுத்தப்படாமை நவீன தொழில்நுட்ப வசதிகள் போதியளவு காணப்படாமை போன்றன இந்நிலைக்குப் பிரதான காரணிகளாகக் காணப்படுகின்றன. இது இப்பிரதேச மீன்பிடி உற்பத்தி பின்னடைவுக்குக் காரணமாக உள்ளது. மேலும், வினைத்திறன் வாய்ந்த ஊழியர் பற்றாக்குறை நவீன உத்திகள் மற்றும் நவீன சாதனப் பயன்பாடுகளின் அறிமுகம் என்பன தற்காலத்தில் அறிமுகமாகியிருந்த போதிலும் கூட இப்பிரதேசத்தில் இவற்றினைப் பயன்படுத்துவது அதற்கான போதிய பயிற்சி, அறிவு இன்றி காணப்படுகின்றதால் இவற்றின் பயன்பாடு அரிதாகவே காணப்படுகின்றது. இதுவும் இப்பிரதேச மீன் உற்பத்திப் பின்னடைவுக்குக் காரணமாகின்றது. மேலும், மீனவக் கூட்டுறவுச் சங்கங்களின் இயக்கமானது செயற்திறனற்ற நிலையிலேயே தொடர்ந்தும் காணப்படுகின்றன.

**முடிவுரை**

கல்முனைக் கரையோர மீனவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வாக தொழில்நுட்பங்கள் தொடர்பான புதிய அணுகுமுறைகளைப் பின்பற்றுதல் மற்றும் அவை குறித்த விழிப்புணர்வும் பயிற்சிகளை வழங்குவதும் அவசியமாக உணரப்படுகின்றன. இயற்கை அனர்த்தங்களிலிருந்தும் பாதுகாத்தல்,மீன்பிடியுடன் தொடர்புபட்ட இதர மற்றும் உப-கைத்தொழில்களில் ஈடுபடுத்துல், மீன்பிடிக் காலமல்லாத வேளைகளில் வேறு வாழ்வாதாரத் தொழில்களில் அவர்களை ஈடுபடுத்தல், சிறந்த கல்வி வாய்ப்புக்களை வழங்குதலும் அவசியமாகின்றன. மீன் பிடி முகாமைத்துவக் கொள்கை ஒன்றின் அவசியம் இன்று பெரிதும் உணரப்பட்டுள்ளது. அதாவது, மீன் வளம் அவற்றின் இனப் பெருக்கக் காலம் மற்றும் வளர்ச்சிக் காலம் என்பன பற்றியும் மீன் பிடிக்குரிய பொருத்தமான காலம் குறித்தும் ஏற்றுக் கொள்ளக் கூடிய சட்டரீதியான மீன்பிடிச் சாதனங்கள் மற்றும் இவற்றின் பாவனை குறித்துமான தேசியக் கொள்கை ஒன்றை அரசு உருவாக்கி அதனை சரியான முறையில் முகாமை செய்வது அவசியமாகும். அது மாத்திரமன்றி மீனவ ஓய்வூதியம், காப்புறுதி, அறவியல் அல்லது மனிதாபிமானம் பற்றிய அம்சங்களின் கடப்பாடு குறித்துமான போதனைகள் தொடர்ந்தும் அவர்களின் சந்ததியினர்க்கு ஊட்டப்படுவதையும் அரச மற்றம் அரசசார்பற்ற நிறுவனங்கள் நிச்சயித்துக் கெள்வதும் அவசியமாகிறது.

அரச மற்றும் அரசசார்பற்ற உதவிகள் இப்பிரதேச மீன் உற்பத்தியில் சாதகமான தாக்கத்தைச் செலுத்த முடியுமாதலால் அவையும் நிச்சயப்படுத்தப்படல் வேண்டும். இப்பிரதேசமானது ஊழிய வளத்தினையும் அதனுடன் தொடர்புபட்ட பல்வேறுபட்ட வாய்ப்பு

வசதிகளையும் அதிகளவில் கொண்டுள்ள போதிலும் அவை வினைத்திறனான விதத்தில் பயன்படுத்தப்படுவதும் அவசயிமாகிறது. எனவே, இப்பிரதேசத்தில் மீன்பிடிக் கைத்தொழில் நடவடிக்கைகளுக்கான வாய்ப்பு வசதிகளை இனங்கண்டு அவற்றை வினைத்திறன் வாய்ந்தவையாக மாற்றுவதனூடாக இத்தொழிற்துறையினை இப்பிரதேசத்தில் விருத்தியடையச் செய்ய முடியும்.

**உசாத்துணை**


1. ஆனந்தன்,(2003),"சமுத்திரவியல்", யாழ்ப்பாணம்- இலங்கை, உயர் கல்வி நிறுவனம்.

2. மத்திய வங்கி,(2007-2009),"ஆண்டறிக்கை", இலங்கை மத்திய வங்கி வெளியீடு.

3. சாரதா மனோகரன்,(2010),"உலகின் மீன்வளம் இன்னும் 40 வருடங்கள் தானா?'தினகரன் 9 பெப்ரவரி 2010.

4. நந்தகுமாரன். ஏ., சூசை. ஏ., எஸ்,(1991/1992),"மீன்பிடிப் பொருளியலும் வருமானச் செலவு ஆய்வும்-, குருநகரைச் சிறப்பாகக் கொண்ட ஆய்வு", யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் புவியியலாளன், இதழ் 6, 7, மற்றும் 8

5. சூசை, ஏ. எஸ், (2009),"மீன்பிடி உபகரணங்களும் மீன்பிடி முறைகளும்", நோர்வே, கடற்றொழில் நீரியல் வள அபிவிருத்தி நிறுவனம்

6. பிருந்தா, பமிலா டியூற்ரா, (2004),"கடற்நொழில் வளவாய்ப்பபுக்களும் அபிவருத்தியும்: வடமாகாணம் ஒரு சிறப்புப் பார்வை",யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,யாழ்ப்பாணப் புவியியலாளன், இதழ் 16-17

7. Iyoob, S (2005),"Obstacles to Overcome Poverty Among Fishing Society",சமூக நோக்கு, சமூக விஞ்ஞானங்கள் துறை, ஒலுவில்- இலங்கை, தென்கிழக்குப் பல்கலைக் கழகம்

8. Alan Post, (2010), "California and Commercial Fishery Problem", see also www.calcofi.org/publications/calcofireports/vl5/vo115 post..pdf. Accessed on 7th March 2010.
9. Annual Fisheries Statistics, (2008), see also www.fisheries.gov.lk/statistics.htm. Accessed on 26th April 2010.